11. கண்ணன் தோழியிடம், தான் செய்த பிழையை எண்ணியே வருந்துவதாகவும், இனி என்றும் ராதையை மறக்காமல் பரிவோடு நடத்துவான் என்றும், ராதையிடம் எடுத்துச் சொல்லி அவளை நன்கு அலங்கரித்துக் கொண்டு வருமாறும், தான் வண்ணமலர்ச் சோலையின் வாசலில் அவளுக்காக காத்திருப்பதாகவும் கூறுகிறான்.

இராகம் : ஆனந்தபைரவி　　　　தாளம் : ஆதி

ஆ : ஸ க ரி க ம ப த ப ஸ்　　　　20-வது மேளகர்த்தாவின்

அ : ஸ் நி த ப ம க ரி ஸ　　　　ஜன்யம்

**பல்லவி**

கண்ணன் வரச்சொன்னான் என்று சொல் ராதையிடம் போய் (கண்ணன்)

**அனுபல்லவி**

வண்ண மலர் சோலையின் வாசலில் நான் காத்திருப்பேன்
வண்ணப்புதுச் சேலை கட்டி வாசமலர் சூடிக்கொண்டு　　(கண்ணன்)

**சரணம்**

கண்ணன் இனி என்றும் உன்னை மறந்திடமாட்டான்
என்று அவளிடம் எடுத்துச் சொல்வாய்
பண்ணிய பிழைதன்னை எண்ணியே வருந்துகின்றான்
பரிவோடு இனி உன்னிடம் நடப்பான் என்று தேற்றி　　(கண்ணன்)

**பல்லவி**

| $I_4$ | O | O |
|---|---|---|
| ; , பப பப மம கம பம கரீ<br>கண்ணன்வரச்சொன்னா. ன் என்று<br>; , பஸ் <u>நித</u>பா மகம பாமகரி<br>கண்ணன்வ. ரச்சொன்னா. ன்என்று<br>; , -<br>. (கண்ணன்) | ஸா ; ; ஸநி<br>சொல். ரா .<br>ஸா; ; ;<br>சொல் . . | ஸ காரி கம பா<br>தை. யிடம் போய்<br>; ; ; ;<br>. . . . |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , பத பபம பா ஸ்ா ஸ்ா ஸ்ா<br>வண்ணமலர் சோ.லை யின்<br>ஸ்ா, பஸ் ஸ்ஸ்ா ஸ்நிரிஸ் நிதபா<br>பேன் வண்ணப்புது சே.லை. கட்டி<br>; , -<br>. (கண்ணன்) | ; , நிஸ்ா க்ரி<br>வா . சலில்<br>; , கா, ம <u>பத</u><br>வா ச மலர் | க்ா, க் ம்ா க்ரி<br>நான் காத்திருப்<br>மத பம கரி கா<br>சூ .டிக் கொண்டு |

**சரணம்**

| $I_4$ | O | O |
|---|---|---|
| ; , பப பபா பா பா நிப பம | ; , க மா ப ம | பம கரி கா ; |
| கண்ணன் இனி என்றும் உன்னை | ம றந் திட | மா .. ட் டான் |
| ; , கம பா, மா பம கரி ஸா | ; , ஸமா கரி | ரீக ரி ஸா ; |
| என்று அ வ ளி. டம் | எடுத்துச் சொல் | வா . . ய் |
| ; , பாத பம பஸ்ா ஸ்ா, ஸ்ா | ; , நிஸ்ா க்ரி | நிஸ்ா ஸ்நி தபா |
| பண் ணிய பிழை தன் னை | எண் ணி யே | வரு ந்து கின்றான் |
| ; , பப ஸ்ா ஸ்நிரி ஸ்நித பபா | ; , க ம பா ப | மத பம கரிகா |
| பரிவோடு இனி. உன்னிடம் | நடப் பான் என் | று... தே.ற்றி |
| ; , - | | |
| . (கண்ணன்) | | |